# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,904—1970 අප්‍රේල් 30 වැනි බ්‍රහස්පතින්දා—1970.4.30

14,904 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV—உள்ளூராட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் |
|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. | 151 |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | — |
| ஆணை விதிகள் .. .. .. | 152 |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | — |
| வரவு செலவுக் கூற்றுக்கள .. .. .. | — |
| வரவு செலவுத் திட்டங்கள .. .. .. | — |
| ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| விதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. | — |
| நானாவித அறிவித்தல்கள் .. .. .. | 152 |


## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 5 (2) ம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவபலங்களைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சர் ரணசிங்க பிரேமதாச ஆகிய நான் இக்கட்டளை வாயிலாக, 1969 ஒகத்து 22 ந் திகதிய 14,868 ஆம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கொழும்பு மாவட்டத்து சியனேகோறளை மேற்கு (அதிகாரிப்பற்று) க் காரியாதிகாரியின் பிரிவிலுள்ள நாரன்வலைக் கிராமப் பிரதேசத்தின் எல்லைகளை மாற்றி, மீளவரையறை செயவதையும் புதிய பியகமைக் கிராமப் பிரதேசத்தை அமைப்பதையும் நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு அவசியமான விடயங்களுக்கான ஏற்பாடுகளைச் செய்யும் கட்டளையை, அதனோடுள்ள அட்டவணையின் 3 வது பந்தியில், " பியகமையும் நாரன்வலையும் ஆகிய கிராமப் பிரதேசங்கள் " என்னும் பதத்துக்குப் பதிலாக " நாரன்வலையும் பியகமையும் ஆகிய கிராமப் பிரதேசங்கள் " என்னும் பதத்தை இடுவதன் மூலம் திருத்துகிறேன்.

ආර්. ප්‍රේමදාස,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு மார்ச்சு மீ 24 ந் உ.

4-1032—30.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,904.

### அத்தியாயம் 265 உள்ளூராட்சி (நிர்வாகப் பிரதேசங்கள்) கட்டளைச் சட்டம்

கீழ்க்காணும் நியமனம் செய்யப்பட்டிருப்பதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :—

இலங்கை நிர்வாக சேவை 5 ம் தரத்தைச் சேர்ந்த கண்டிப் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எல். எம். சமரசிங்க அவர்கள் 1970, பெப்ருவரி 22 ம் திகதி முதல் மறு அறிவித்தல் வரை, தமது சொந்தக் கடமைகளுடன் மாத்தளைப் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளராகவும் கடமையாற்றுவார்.

டபிள்யு. பத்மநாதன்,
சிரேட்ட உதவிச் செயலாளர்,
(நிதியும் தாபனமும்).

உள்ளூராட்சி அமைச்சு,
கொழும்பு,
1970 ம் ஆண்டு மார்ச் மீ 15 ந் உ.

4-1024—30.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,904.

### வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 14 ந் உ.

# துணைவிதிகள்

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ஆவது பிரிவின் கீழ் பிந்தனை தெற்குக் கிராமச் சபையால் ஆக்கப்பட்டு அப்பிரிவினுல் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

ஈ. ஜீ. குணவர்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு மார்ச்சு மீ 31 ந் உ.

### துணைவிதி

1952 நவெம்பர் 28 ந் திகதிய 10,473 ஆம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட வாகனங்கள், மிருகங்கள் மீதான வரிசம்பந்தமான துணைவிதிகள், அவற்றுக்குள்ள அட்டவணைக்குப் பதிலாகப் பின்வரும் புதிய அட்டவணையை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றன :—

*அட்டவணை*

| | |
|---|---|
| ஒரு வண்டில், பயண வண்டி அல்லது ஜின்றிக்ஷோ தவிர்ந்த வேறெந்த வாகனத்துக்கும் .. | වී. ද. වා. |
| இரட்டை மாட்டு வண்டிலுக்கு அல்லது பயண வண்டிக்கு .. | වී. ද. බ. ක. |
| ஒற்றை மாட்டுவண்டிலுக்கு அல்லது பயண வண்டிக்கு .. | වී. ද. බ. බා. |
| கைவண்டிக்கு அல்லது ஜின்றிக்ஷோவுக்கு .. | වී. ද. රි. |
| துவிச்சக்கர வண்டிக்கு .. .. | වී. ද. බ. |

4–1026—30.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,904.

---

# நானாவித அறிவித்தல்கள்

## மன்னார் பட்டின சபை

### ஊன் வினைஞர்பற்றிய சட்ட அறிவித்தல்

ஊன் வினைஞர்பற்றிய சட்டம் (அத்தியாயம் 272) 7 (2) ம் பிரிவின் தாற்பரியப்படி இதன்கீழ்க் காணப்படும் அட்டவணையில் காணப்பவரிடமிருந்து காணப்பவரிடமிருந்து 1970 ம் ஆண்டுக்கு ஊன் வினைஞர் கடைக்கு லைசென்ஸ் தரும்படி விண்ணப்பம் கிடைக்கப்பட்டிருக்கிறது.

மன்னார்ப் பட்டினசபையில் பரிபாலன இடாப்பில் வசிப்போர் எவரேனும் லைசென்ஸ் கொடுப்பதை மறுக்க விரும்பினுல் மறுப்பதற்கான காரணங்களை இந்த வர்த்தமானப் பத்திரிகையின் (கெசற்று) பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து பதினாலு (14) நாட்களுக்கிடையில் இணைப்பிரதிகளாக எமக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

*அட்டவணை*

| விண்ணப்பகாரரின் பெயரும், விலாசமும் | வியாபாரம் செய்யும் இடம் |
|---|---|
| 1. பி. எஸ். எஸ். கே. ஜெயினூல் ஆப்தீன், பெரியகடை, மன்னார் | மாட்டிறைச்சிக் கடை இல. 1, 2 பொதுச் சந்தை நிலையம், மன்னார் |
| 2. எம். ஜெலீது, மூர் வீதி, மன்னார் .. | ஆட்டிறைச்சிக் கடை இல. 1, 2 பொதுச் சந்தை நிலையம், மன்னார் |

எம். எஸ். ஏ. றகிம்,
தலைவர்,
பட்டினசபை, மன்னார்.

பட்டினசபைக் காரியாலயம்,
மன்னார்,
1970 ம் ஆண்டு ஏப்பிரல் மீ 16 ந் உ.

4–1030—30.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,904

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

**அட்டவணை—1970**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| ஏப்பிறல் | 3.4.70 | வெள்ளி | 25.3.70 | புதன் | பி. ப. 3.30 |
| | 10.4.70 | வெள்ளி | 3.4.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 17.4.70 | வெள்ளி | 8.4.70 | புதன் | பி. ப. 3.30 |
| | 24.4.70 | வெள்ளி | 17.4.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 30.4.70 | வியாழன் | 23.4.70 | வியாழன் | பி. ப. 3.30 |
| மே | 8.5.70 | வெள்ளி | 30.4.70 | வியாழன் | பி. ப. 3.30 |
| | 15.5.70 | வெள்ளி | 8.5.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 22.5.70 | வெள்ளி | 15.5.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 29.5.70 | வெள்ளி | 22.5.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| யூன் | 5.6.70 | வெள்ளி | 29.5.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 11.6.70 | வியாழன் | 5.6.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 18.6.70 | வியாழன் | 11.6.70 | வியாழன் | ந. ப. 12.00 |
| | 25.6.70 | வியாழன் | 18.6.70 | வியாழன் | ந. ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகன்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1970 ஆம் ஆடு மாச்சு மீ 5 ஆந் உ.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.